மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1994), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பட வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம். பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி, ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20—4—1994) காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை, பிற்பகல் 6-11 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

92. மனுக்கள் குழுவின் இருபத்தி இரண்டாவது அறிக்கை, 1993–94.

93. மனுக்கள் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை, 1993–94.